# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு
# தவக்காலத்தின் 6வது ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 50: 4-7,
திருப்பாடல் 22: 7-8. 16-17. 18-19. 22-23,
திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2: 6-11,
மாற்கு எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்
திருப்பாடுகள் 14: 1-15: 47 )

## திருப்பலி முன்னுரை:

திருமகன் இயேசுவின் அன்பு சகோதரர்களே, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வழிபாட்டு ஆண்டின் மிகக் குறிப்பிடத்தக்க தூய நாட்களின் தொடக்க நாளாகிய இன்று தூயவாரத்தின் வாழ்த்துக்களை அன்போடு கூறி மகிழ்கிறேன்.

இன்று குருத்து ஞாயிறைக் கொண்டாடுகிறோம். புனித வாரத்தின் தொடக்கமாகவும், நுழைவு வாயிலாகவும் குருத்து ஞாயிறு அமைகின்றது. தாவீதின் மகனுக்கு ஓசான்னா முழக்ககங்களோடும், ஒலிவ கிளைகளை கைகளிலே ஏந்திய வண்ணமாய் எபிரேயர் எருசலேமிற்குள் வீரப்பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தப் பயணம், தான் இயேசு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதாகவும், மீட்பின் முதல் படியாகவும் அமைகிறது. ஈராயிரம் ஆண்டுகளாய் விடுதலைக்காய், வாழ்வின் விடியலுக்காய் ஏழை எளிய மக்களுக்கு நம்பிக்கையும், புத்துயிரையும் கொடுப்பதாகவும் அமைகிறது. அத்தகைய நாளை நினைவு கூறும் இன்று நாமும் குருத்தோலைகளை உயர்த்தி கொண்டு பவனியில் பங்கெடுக்க இருக்கின்றோம். பட்டங்களையும், பதவிகளையும் எதிர்பார்த்து இயேசுவின் பின் சென்றால் அவரின் பயணத்தில் நிச்சயம் நமக்கு இடமிருக்காது. இயேசுவைப்போல நாமும் தன்னலப் போர்வையை தகர்த்தும், ஆணவத்தை அழித்தும் இயேசுவின் பின் பயணிப்போம். அப்போது இப்புனித வாரம் நம்மை புனிதர்களாக நிச்சயம் மாற்றும் என்ற மனநிலையோடு இத்திருவழிபாட்டில் பங்கெடுப்போம். இத்திருப்பவனியின் வழியாக இயேசுவோடு கல்வாரிக்குப் பயணமாவோம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. தந்தையே இறைவா!

இவ்வுலகில் பயணம் செய்யும் திருச்சபையின் பணியாளர்களாகிய எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவரையும் தூய ஆவியின் பொழிவால் நிரப்பி, இன்றைய சமுதாயத்தில் நிலவும் பாவச் சூழ்நிலைகளை எதிர்த்துப் போராடவும், மக்களை வழிநடாத்தவும் வேண்டிய ஆற்றலை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நன்மைகளின் நாயகனே எம் இறைவா!

வரவிருக்கும் இப்புனித வார நாட்களில் நாங்கள் எங்கள் பாவங்களையும், பலவீனத்தையும், குற்றங்குறைகளைக் களைந்து வழக்கமாக மேற்கொள்ளும் நிகழ்வாக உம் பாஸ்கா விழாவைக் கொண்டாடாமல், உள்ளத்தில் மாற்றம் நிறைந்தவர்களாகத் தூய மனதுடன் உம்மை அணுகி வர இறைவா உமை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் தந்தையே இறைவா!

துன்பங்கள் வழியாகத் தூய்மை அடைந்து, மீட்பின் திட்டத்தில் பங்குபெறுகிறோம் என்பதை, திருச்சபையின் மக்கள் அனைவரும் உணர்ந்து நற்செய்தியின் மதிப்பீடுகளின்படி வாழ்ந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஏழைகளின் திருவுருவே எம் இறைவா!

இந்த அருளிரக்க நாட்களில் தவமுயற்சிகளில் மட்டும் நாங்கள் கவனம் செலுத்தாமல் உள்ளத்தில் மனமாற்றமும், அதன் வெளிப்பாடாக, ஏழைகள் மட்டில் கவனம் செலுத்தி, அவர்களின் வாழ்வு சிறந்து விளங்கிட, அந்த மீட்புச் செயலின் வழியாக உம் சீடத்துவ வாழ்வில் அவர்களும் பங்கேற்கத் தேவையான மீட்பின் அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. அன்புத் தந்தையே எம் இறைவா!

இன்று உலகலாவிய நவீன வளர்ச்சி என்ற பாதையில் வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத் தாக்கத்தில் சிக்கித் தவிக்கும், ஏழை நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளதார நெருக்கடிகள் , ஊழல், இலஞ்சம், தீவிரவாத அச்சுறுத்தல்கள் இவைகளினால் வாழ்வை இழந்து தவிக்கும் ஏழை மக்களின் மீது உமது அளவு கடந்த இரக்கத்தினால், இத்தவக்கால அருள்வரங்களைப் பெறத் தேவையான உமது வல்லமையைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

6. கருணையின் தெய்வமே!

எம் இறைவா! சமூகத்தில் தனக்கு யாருமே இல்லை என்று தனித்து விடப்பட்ட விதவைகள் அனாதைகள், கைவிடப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர் அனைவரும் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட உம் பாடுகளின் வழியாக அவர்கள் தங்களை புதுப்பித்த உம் இறை அருள் அவர்களுக்கு உதவிக்கரமாக அமைய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

7. உமது மகன் இயேசுவில் நம்பிக்கைக் கொள்வோர் நிலைவாழ்வுப் பெறுவர் என்ற வாக்களித்த எம் இறைவா!

எங்கள் நம்பிக்கை இறை இயேசுவில் நிலைப்பெற்று, எம் வாழ்வு ஏற்றம் பெறவும், அதனால் நாங்கள் உம் இறையரசின் சாட்சிகளாய் ஒளிர்ந்திடவும், அடுத்திருக்கும் எம் மக்களையும் இறையரசில் இணைத்திட உழைக்கவும் தேவையான ஞானத்தை அனைவருக்கும் வழங்கிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

8. பராமரித்தாளும் எங்கள் இறைவா!

இன்றைய உலகில் துன்புறும் திருஅவைக்காக உமது இரக்கத்தையும் பாதுகாப்பையும் வேண்டுகிறோம். சிறப்பாகச் சிரியாவிலும், மற்ற நாடுகளிலும் ஆட்சியாளர்களால் வஞ்சிக்கப்பட்டும், கொடுமைப்படுத்தப் பட்டுவரும் உம் எளிய மக்கள் விரைவில் விடுதலைப் பெற்று புதிய புனர்வாழ்வுப் பெற்றிடத் தேவையான மாற்றங்களை அவர்கள் பெற உமது அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.